1989 மே 2]

கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் ஏதாவது ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்கலாமா என்பதை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திலே, அதாவது நாம் கடன் கொடுக்கிறோம். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 8 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கொடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எல்லா பகுதி மக்களுக்கும், எல்லோருக்கும் நாம் இலவசமாக வீடு கட்டிக்கொடுக்க முடியாது. ஏனென்றால் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டம் எல்லாம் மத்திய அரசு பணம். அதிலே பாதி பணம் நம்முடையது என்.ஆர்.ஈ.பி.யில். மிச்சம் எல்லாம் 'The entire amount is spent by the Central Government ஆக இருக்கிறது. ஆகையால் நாம் வீடு கட்டக்கூடிய நிலைமையில், சில இடங்களிலே அந்த அர்பன் அவுசிங், டார்மென்ட்-ஆக ஆகி விட்டது. அதையும் சேர்த்து இந்த கடன் கொடுக்கும் பணத்தை இந்த ரூரல் அவுசிங் ஸ்கீம் மூலமாக, 'அதாவது டிபென்டிங் அப்பான் தி கேபாசிடி' எந்த அளவுக்கு அவர்களால் திருப்பிக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கலாம். இப்போது நான் 30 ஆயிரம் ரூபாய் அளவில் வீடு கட்டிக்கொள்ள நினைக்கிறேன் என்றால் அதை இந்த சொசைட்டி மூலமாக கொடுத்து உதவுவதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு ஏறத்தாழ 29 ஆயிரம் ரூபாயும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஏறத்தாழ 36 ஆயிரம் ரூபாயும் கடன் கொடுத்துதவக்கூடிய திட்டம் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

வேனூர் இராமாமிர்த அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் ஈ. வெ. ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் ஆகிய நலத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது பேரவைக்கு ஓர் அறிக்கை படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங் களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பு அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000 உதவித் தொகை வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டம் ''மூவாலூர் இராமாமிர்தம் அம்மை யார் நினைவு திருமண உதவித் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டு அரசாணை நிலை எண் 368, பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 13-4-1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற் றும் இத்திட்டத்தினால் பயனடைவோருக்கு இந்த உதவித் தொகையைப் பெற என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்பன பற்றி விளக்கங்களைக் கொண்ட விரிவான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

2. நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள் கர்ப்பவதியாகும்பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்ட முடியாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் மே லும் ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. இதை நிவர்த்தி செய்வதற்காக, அவர்களுக்கு கர்ப்பவதியான 8-வது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந் தை பிறந்த பின்னர் 2 மாத காலத்திற்கும், மாதம் ரூ. 50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூ. 200 வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ் உதவி அளிக்கப்படும். இத்திட்டம் ''டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டு அரசாணை நிலை எண் 369, பிற்பட்டோர் நலம், சத் துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 13-4-1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டிய விதிமுறைகள் மற்றும் இத் திட்டத்தினால் பயனடைவோருக்கு இந்த உதவித் தொகையைப் பெற என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்பது பற்றிய விளக்கங்களைக் கொண்ட விரிவான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

3. ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல் லூரி மாணவியருக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங் கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவி யருக்குப் பட்டப்படிப்பில் 1989-90 ஆம் கல்வியாண்டில் முத லாண்டு பட்டப்படிப்பு மாணவியருக்கு அமுல்படுத்தப்படும் இத்திட்டம் '' ஈ. வெ. ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டு அரசாணை நிலை எண் 412, கல்வித் துறை, நாள் 13-4-1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும்

மாணவியருக்கு அமுல்படுத்தப்படும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானத்தை நிர்ணயித்துத் தனியாக ஆணை பிறப்பிக்கப்படும்.

3. தகவல் கோரல்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் ஒரு சடலம் கிடந்ததால் பூசைகள் நடைபெறாமல் இருப்பது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சாபாநாயகர் அவர்களே, காஞ்சீபுரத்தில் இருக்கின்ற மிகப் புகழ் பெற்ற கோவில் ஏகாம்பரநாதர் திருக்கோயில் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆண்டுகொண்டிருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி கிளைவ் கூட அந்த ஆண்டவனுக்கு ஒரு அருமையான பதக்கம் அளிக்கின்ற அளவிற்கு உலகமெங்கும் பக்தி மணம் பரப்பும் கோவில் அந்தத் திருக்கோவில். அந்தத் திருக்கோவிலிலே ஒருவருடைய சடலம் இருப்பதாகவும், அந்தச் சடலம் இருக்கிற காரணத்தாலே கோவில் மங்கலம் இழந்ததாகவும், அதனாலே பூசைகள் நடக்காமல், பக்தர்கள் மன வேதனை உற்றிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அரசு அதனைக் கருத்திற் கொண்டு, பக்தர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படும் அளவுக்கு செயற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதுபோல, புகழ் பெற்றதும், ராபர்ட் கிளைவ் அவர்களாலே பாராட்டப்பட்டதுமான காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் ஒரு சடலம் இருந்தது என்பதோடு செய்தி முடிந்து விடவில்லை. அந்தச் சடலத்திற்குச் சொந்தக்காரர், ஒரு சித்து விளையாடுகிற சாமியாராக அந்தத் திருக்கோவிலில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார். அவர் அந்தக் கோவிலிலே தங்கி, பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் கடவுள் அருள் பெற்றவர் என்று நம்பிய காரணத்தால் மக்கள் அவரைநம்பிப் பாராட்டி, வணங்கி வந்திருக்கிறார்கள். அவர் ஞாயிற்றுக்கிழமை இறந்துவிட்டார். நீண்டகாலமாக அவர் அந்தக் கோவிலில் இருந்து வந்ததால், அவரது உடலை அந்தக் கோவிலுக்குள்ளே புதைக்க வேண்டுமென்று அவருடைய பக்தர்கள் தீர்மானித்து, அதன்படி அந்த உடலை அந்தக் கோவில் வளாகத்திற்குள் புதைத்துவிட்டார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கோவில் அர்ச்சகர்கள் கோவிலை மூடிவிட்டார்கள். பூசை, நைவேத்யங்கள் நடைபெறாது என்று அறிவித்துவிட்டார்கள். தகவல் அரசுக்குத் தெரிய வந்ததும், உடனடியாக அறநிலையத் துறை சம்பந்தப்பட்டவர்கள் காஞ்சீபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, நேரடியாக அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலை